# மாகாண சபையை ஏற்க மறுக்கும் ஊர்வலம்!



ஜனாதிபதி ஜெயவர்த்தனவினால் முன்வைக்கப்பட்டுள்ள மாகாண சபைத் திட்டத்தை எதிர்த்தும் அரசியல் கட்சிகளின் மாநாட்டைக் கண்டித்தும் தமிழ் பேசும் மக்களால் நடத்தப்பட்ட மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்றது. மருதனமடத்திலிருந்து ஆரம்பமாகி யாழ். பல்கலைக்கழகம் வரையில் நடைபெற்ற இவ் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என்ற வேறுபாடின்றி பத்தாயிரத்திற்கும் அதிகமானோர் உற்சாகத்துடன் கலந்துகொண்டார்கள். இவ் ஊர்வலத்தில் பங்குபற்றுவதற்காக குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் ஆயிரக்கணக்கானவர்கள் லொறிகள், பஸ்கள் மூலமாக ஊர்வலம் ஆரம்பமாகிய மருதனமடம் சந்திக்கு காலை எட்டு மணி முதல் வந்து சேர்ந்தார்கள். காலை பதினொரு மணியளவில் ஆரம்பமான இவ் ஊர்வலம் கே. கே. எஸ் வீதி, நாச்சிமார் கோவில் வீதி ஊடாக நண்பகல் இரண்டு மணியளவில் யாழ். பல்கலைக்கழக மைதானத்தை வந்தடைந்தது. மாகாண சுயாட்சி ஜே. ஆரின் கண்துடைப்பு, கொழும்பில் பேச்சுவார்த்தை இங்கு படுகொலை, கூட்டணியே உன் பதவி ஆசை தீரவில்லையா?, மக்கள் இராணுவ முகாமில், கூட்டணி பஞ்சுமெத்தையில்,

— 6-ம் பக்கம் பார்க்க

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 3 14-7-86 திங்கள் ( ஆனி 30 துல்க 6 ) முழக்கம் 60

★ ஐந்து விடுதலை இயக்கங்களும் ஒரே மேடையில் அறிவிப்பு

# மாகாண சபையை நாம் ஏற்பது தமிழருக்கு செய்யும் துரோகம்!

(அலுவலக நிருபர் இ. பாரதி)

போராட்டத்தில் ஒரு தேக்க நிலையை ஏற்படுத்தி திட்டமிட்ட முறையில் தமிழ் பேசும் மக்களை அழித்தொழித்து தமது ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்காகவே புதிய மாகாண சபைத் திட்டம் அரசினால் கொண்டுவரப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ள ஐந்து பிரதான தமிழீழ விடுதலை அமைப்புக்களும் இதனைத் தாம் முற்றாக நிராகரிப்பதாகவும் அறிவித்துள்ளார்கள்.

யாழ்ப்பாணத்தில் நேற்று மாலை நடைபெற்ற பத்திரிகையாளர்களின் மாநாட்டில் வைத்தே ஈழ விடுதலைக்காகக் களத்தில் நின்று போராடும் ஐந்து விடுதலை இயக்கங்களின் சார்பாகவும் இம் முடிவு அறிவிக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள், ஈழப் புரட்சி அமைப்பு (ஈரோஸ்), தமிழ் ஈழ ராணுவம் (ரீ. ஈ. ஏ.), ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ. பி. ஆர். எல். எஃப்) தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) ஆகியவற்றின் பிரதிநிதிகளே தாம் இம் மாகாண சபைத் திட்டத்தை முற்றாக எதிர்ப்பதாக நேற்றைய பத்திரிகையாளர்களின் மாநாட்டில் தெரிவித்தார்கள்.

மேற்படி ஐந்து விடுதலை அமைப்புகளும் பகிரங்கமான முறையில் ஒரே மேடையில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தியது இதுவே முதற்தடவை என்பது இங்கு முக்கியமாகக் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இயக்கங்களுக்குள் எந்தவித மான பிரச்சினைகள் இருக்கின்ற போதிலும் பொதுவான இலட்சியத்திற்குப் பாதிப்பு ஏற்படும்போது இயக்கங்கள் அனைத்தும் ஒன்றுபடும் என்பதனையே இது எடுத்துக் காட்டுவதாக இங்கு கருத்துத்

—6ஆம் பக்கம் பார்க்க

அடம்பனில் பல ராணுவத்தினர் பலி

## புலிகள் - ராணுவம் கடும் மோதல்!

மன்னார் அடம்பனில் நேற்று விடுதலைப் புலிகளுக்கும் ராணுவத்தினருக்குமிடையே ஆரம்பமான நேரடிமோதல் இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை தொடர்ந்து இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை ஆறுமணியளவில் சுமார் முன்நூறுக்கும் அதிகமாக ராணுவத்தினர் நடைபவனியாகவும், இரண்டு பப்லோ ஆமட் வாகனங்களிலும் அடம்பனிலுள்ள தங்கள் முகாமை முற்றுகையிட முயன்றபோது அம்முயற்சி தங்க

...6ஆம் பக்கம் பார்க்க

நேற்று இரண்டரை மணிநேரம் பேசினர்

## கூட்டணிஜனாதிபதிபேச்சுக்கள் இன்றுமாலைமீண்டும்தொடரும்

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களுக்கும், ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்குமிடையிலான முதலாம் கட்டப்பேச்சுவார்த்தை நேற்றுக்காலை இரண்டரை மணித்தியாலம் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றது. இப்பேச்சுவார்த்தை இன்று மாலை மீண்டும் தொடரும்.

இலங்கை அரசு சமர்ப்பித்த யோசனைகளில் தெரிவிக்கப்பட்ட விபரங்களை ஒவ்வொரு அங்கமாக இச்சந்திப்பில் தாங்கள் ஜனாதிபதியிடம் கேட்டதாக, திரு. அமிர்தலிங்கம் நேற்றிரவு 'ஈழமுரசு'க்குத் தெரிவித்தார்.

"இச்சந்திப்பின்போது மேற்கொள்ளப்படும் பேச்சுவார்த்தை விபரங்களை பத்திரிகைகளுக்கு வெளியிடுவதில்லை" என்று கூட்டணியும் அரசாங்க தரப்பினரும் முடிவெடுத்திருந்ததால் இரு பகுதியினரும் பேச்சு விபரங்களை வெளியிட மறுத்து விட்டனர்.

—6ஆம் பக்கம் பார்க்க

## மாகாணசபை யோசனை சுதந்திரக்கட்சி நிராகரிப்பு

(கொழும்பு)

இனப் பிரச்சினைக்கு ஜனாதிபதி சமர்ப்பித்த சகல யோசனைகளையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முற்றுமுழுதாக நிராகரித்துள்ளதாக நேற்றிரவு கட்சி அறிவித்தது.

இதற்குப் பதிலாக சுதந்திரக் கட்சி புத்தம் புதிய யோசனைகளை "மாற்று யோசனை"யாக முன்வைக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று கட்சியின் மத்திய குழு அதன் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமை

—6ஆம் பக்கம் பார்க்க

## கட்சிகள் மாநாட்டில் கூட்டணி பங்கு கொள்ளாது

கொழும்பில் நாளை நடைபெறும் அரசியல் கட்சிகள் மாநாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணி பங்குபற்ற மாட்டாது என்று கட்சியின் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

ஜனாதிபதியுடன் நேற்று நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையை அடுத்துஇந்த முடிவை எடுத்ததாக கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன.

—6-ம் பக்கம் பார்க்க

கிளிநொச்சியில் நேற்று

## ராணுவ ரோந்து முறியடிப்பு பொதுமக்களில் மூவர் பலி!

கிளிநொச்சியில் நேற்று மீண்டும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட ராணுவத்தினரை முன்னேற விடாது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தி, அவர்களை முகாமுக்குத் திருப்பி அனுப்பியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ராணுவத்தினர் திரும்பிச் செல்லும் வழியில் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டினால் பொதுமக்களில் மூவர் மரணமானதாகவும், மேலும்

—6ஆம் பக்கம் பார்க்க

## கொடும்பாவி எரிப்பு

ஆர்ப்பாட்ட ஊர்வலம் நேற்று பிற்பகல் பல்கலைக்கழக முன்றலை வந்தடைந்தபோது, அங்கு கூட்டணித் தலைவர் ஒருவரின் கொடும்பாவி பறைமேளம் சகிதம் எடுத்துவரப்பட்டு எரிக்கப்பட்டது.

## தமிழீழ ராணுவம் பங்குபற்றியது

மாகாணசபை யோசனை மற்றும் கொழும்பு அரசியல்

—6ஆம் பக்கம் பார்க்க

# வல்வைபிரஜைகள்குழுவிற்கு புதிய நிர்வாகசபை

(வல்வெட்டித்துறை)

தற்போது நிகழ்ந்துகொண்டிருக்கும் கெடுபிடியான, இக்கட்டான, பயங்கர சூழ்நிலையில், அரச படைகளினுல் அப்பாவித் தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை, அநியாயங்களைத் தட்டிக் கேட்கவும், வடக்கு, கிழக்குப் பகுதிகளில் அரச தரப்பினரால், தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தப்பட்டு மூடிமறைக்கப்படும், அட்டூழியங்களை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவது, இவர்களது செய்கைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேண்டிய நிவாரண உதவிகள், செயற்பாடுகளை உடனுக்குடன் செய்துமுடிக்க வேண்டிய கடமைகள் அவ்வப் பகுதி பிரஜைகள் குழுக்களின் தன்னலமற்ற சேவையிலும் அயராத உழைப்பிலும், பண்பான அணுகு முறையிலும் தான் தங்கியுள்ளது.

இவ்வாறு உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் நடைபெற்ற வல்வைப் பிரஜைகள் குழு தெரிவுக் கூட்டத்தில் அதன் செயலாளர் திரு. வீ. விஜயரத்தினம் குறிப்பிட்டார்.

"வல்வெட்டித்துறை வடக்கு தெற்கு, வல்வெட்டி, கெருடாவில், தொண்டமானாறு, பொலிகண்டி, இமையாணன், உடுப்பிட்டி, கரணவாய் வடக்கு ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய ஒன்பது கிராமசேவகர் பிரிவிலிருந்தும் தெரிவுசெய்யப்பட்ட குழுக்களிலிருந்து, சகல பிரிவுகளிலுமுள்ளவர்களும் பிரதிநிதித்துவம் வகிக்கும் வகையில் இக் குழு புனரமைக்கப்பட்டு தெரிவுசெய்யப்பட்டமை குறிப்பிடப்படவேண்டியது என குழுவின் தலைவர் திரு. கே. ஈ. திருநாவுக்கரசு தனது உரையில் கூறினுர்.

பின்வருவோர் வல்வைப் பிரஜைகள் குழுவின் அதிகார நிறைவேற்று உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு கே. ஈ. திருநாவுக்கரசு, துணைத்தலைவர்கள் திரு. மு. ரகுராஜகுமார், திரு. ம. குட்டித்தம்பி, திரு. வை. மகாதேவா, செயலாளர்: திரு. வீ. விஜயரத்தினம், துணைச் செயலாளர்கள்: திரு. இ. சத்துருசங்காரவேல், திரு. எஸ். சுந்தரமூர்த்தி, திரு வி. எஸ். சித்திரவடிவேல், பொருளாளர்: திரு. சி. விசாகப்பெருமாள், கணக்காய்வாளர்கள்: திரு. சி. சி. சோமசுந்தரம், திரு. சி. மோ. சிவமயம். மற்றும் ஒன்பது பேர் கொண்ட நிர்வாக குழு உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## வராத்துப்பளை பிரஜைகள் குழு

(புலோலி)

தும்பளை கிராமசேவை அலுவலர் பிரிவிலுள்ள யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை புலோலி உப அலுவலகப் பகுதி (வராத்துப்பளை)க்கான பிரஜைகள் குழு ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

தலைவராக திரு. கே. விஞசித்தம்பி) இளைப்பாறிய கணக்காளர்), செயலாளராக திரு. எஸ். திருச்செல்வம் (முன்னுள் கிராமோதய சபைத் தலைவர்), பொருளாளராக திரு. வி. வேலுப்பிள்ளை (பருத்தித்துறை புலோலி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுச் சங்க இயக்குநர் சபை உறுப்பினர்) யும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

செயற்குழு உறுப்பினர்களாக திரு. ஆ. மகேசன், திரு. எஸ். அருந்தவராசா (ரவி), திரு. எஸ். கதிரவேற்பிள்ளை, திரு. த. இராஜன், திரு. வே. கதிர்காமலிங்கம், திரு. எம். பரமேஸ்வரன் ஆகியோரும் தெரிவாகினர்.

## கொக்குவில் மேற்கு - மணியர்பதி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் புதிய நிர்வாக சபை

| | | |
|---|---|---|
| போஷகர்கள்: | திரு. | இ. புஸ்பராஜா, |
| | திரு. | பொ. சீவரெத்தினம், |
| | திரு. | க. மகாதேவு, |
| தலைவர்: | திரு. | சி. இ. அன்னலிங்கம், |
| உப. தலைவர்: | திரு. | இ. ஜெகநாதன், |
| காரியதரிசிகள்: | திரு. | பொ. முத்துக்குமாரு, |
| | திரு. | மு. வ. சுப்பிரமணியம், |
| உப. காரியதரிசி; | திரு. | பா. தியாகராசா, |
| தனுதிகாரி: | திரு. | சி. அன்னலிங்கம், |
| உப. தனுதிகாரி: | திரு. | சு. க. குகராசா, |
| கணக்குப்பரிசோதகர்: | திரு. | இ. சச்சிதானந்தம், |

நிர்வாகசபையினர்: திரு. வீ. கனகரெத்தினம், திரு. சு. பற்பநாதன் திரு. அ. வ. அருளானந்தம், திரு. ச. குமாரசுவாமி, திரு. நா. குணசிங்கம், திரு. சு. சண்முகநாதன், திரு. ஆ. து. துரைநாயகம், திரு. சி. கு. சிவசுப்பிரமணியம், திரு. சி சுப்பிரமணியம், திரு. சி. சிவசுப்பிரமணியம், திரு சு. சிவயோகநாதன், திரு. தி. நடேசன் யாவரும் புதிய நிர்வாக அங்கத்தவர்களாக தெரிவு செய்யபபட்டார்கள் தலைவர் திரு சி. இ. அன்னலிங்கம் அவர்கள் தலைமையுரையில் ஆலயங்கள் புனித இடமாக இருத்தல் வேண்டும். மனச்சாந்தி வேண்டி இறைவழிபாடு செய்யும் அடியார்களுக்கு இடைஞ்சல் தருமிடமாக இருக்கக்கூடாது. ஆலயவளர்ச்சியைக் கொண்டுதான் கிராமத்தின் வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் அறியமுடியும் எனக் கூறிஞர்.

இங்ஙனம்,
பொ. முத்துக்குமாரு,
மு. வ. சுப்பிரமணியம்,
செயலாளர்கள்.

R/24044

## கருத்தரங்கில் பேச்சு:

# தீவுப்பகுதியைத் துண்டிக்க அரசாங்கம் முனைகின்றது!

(வண்ணர்பண்ணை)

தமிழ்பேசும் மக்கள் இடம், காலநேரம் எதுவுமின்றி இராணுவத்தினுல் கொலைசெய்யப்படுகின்றுர்கள், சூறையாடப்பட்டு நிர்க்கதியாக்கப்படுகின்றுர்கள். ஆனுல் தென்இலங்கை மக்கள் சுபீட்சமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றுர்கள். இந்நிலையில் தான் பேராசிரியர் டேவிற் செல்போன் இலங்கை இனப்பிரச்சினை தொடர்ந்து ஒரு வழிக்குவருவதாகவில்லை என அரசைக் குற்றம்சாட்டியுள்ளார்.

இவ்வாறு, பல்கலைக் கழக புவியியற்றுறைத் தலைவர் திரு. எஸ். பாலச்சந்திரன் தீவுப் பகுதி மக்களின் இன்றைய நெருக்கடி நிலை பற்றிய கருத்தரங்கில் தலைமைதாங்கி பேசினுர்.

யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இக் கருத்தரங்கு நடைபெற்றது.

மலையக மக்கள் இரண்டாம் தர பிரஜைகளாக்கப்பட்டுள்ளனர். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் எல்லைகள் பறிபோகின்றது. தமிழர் பிரதேசக் குடியேற்றத் திட்டங்களை வந்தேறு குடிகளாக நிரந்தரமாக்க அரசு முனைகின்றது. இதே போன்றுதான் யாழ். மாவட்டத்திலிருந்து தீவுப் பகுதியை அன்னியப்படுத்த அரசு பண்ணையிலும், மண்டைதீவுச் சந்தியிலும் இராணுவ முகாம்களை அமைத்துள்ளது. தீவுப் பகுதி மக்களை பைத்திய உணர்வுள்ளவர்களாக்க அரசு திடசங்கற்பம் பூண்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

யாழ். உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரி திரு. பற்குணம் பேசும்போது, இன்று இலங்கையில் உள்நாட்டு யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. உள்நாட்டுப் போரில் பிரச்சினைகள் அதிகரிப்பதும் மக்கள் பாதிக்கப்படுவதும் தவிர்க்க முடியாது. இந்தியாவில் கல்கத்தாவிலுள்ள கம்பனியொன்று அனுதைக் குழந்தைகளை எவ்வளவு தூரம் கஷ்டப்படுத்தி பிச்சையெடுக்க வைக்கிறுர்களோ அதே போன்று தமிழ் மக்களை கஷ்டப்படுத்த அரசு முனைகின்றது. கிழக்கில் மட்டுமல்ல வவுனியா தாடக்கம் யழ்ப்பாணம் வரை பிரச்சினைகள் பூதாகரமாக உருவெடுத்துள்ளது என்றுர்.

மேலும் பலரும் போக்குவரத்து, உணவு, வைத்தியசாலை கல்வி, தபால்தந்தி தொடர்பு போன்ற பிரச்சினைகளைப் பற்றி எவ்வாறு இவைகளைத் தீர்க்கலாம் எனவும் கருத்துவழங்கினர்.

பல தீர்மானங்களையும் நிறைவேற்றி பல குழுக்களையும் தெரிவு செய்து இதற்கு தாய்ச் சங்கமாக "தீவுப்பகுதி அபிவிருத்திக் கழகம்" ஒன்று அமைத்து உறுப்பினர்களும் தெரிவு செய்யபட்டனர்.

## முழங்காவில் சித்திவிநாயகர்

# இன்றுமுதல் 45 தினங்கள் மண்டலாபிஷேக விழா

வேண்டுவார்க்கு வேண்டுவன ஈந்தருளும், வாழையும், மருதுஞ் சூழ்ந்த முழங்காவில் பதியில் மன்னுர் சாலையருகே கோயில் கொண்டருளியிருக்கும் சித்தி விநாயகரின் இரண்டாங்கட்டத் திருப்பணிவேலைகள் 1983 ம் ஆண்டு ஆவணி மாதத்தில் ஆலய பரிபாலன சபையினரதும், இப் பகுதி குடியேற்றவாசிகளினதும் அயராத முயற்சியினுல் ஆரம்பிக்கப்பட்டது. ஆனுல் துர்அதிஷ்டவசமாக 1984 மாசியில் ஏற்பட்ட பெருவெள்ளத்தினுல் கோயிலைச் சூழ ஐந்தடி வெள்ளம் நிரந்தரமாகவே ஆறு மாத காலமாகத் தேங்கி நின்றமையினுல் திருப்பணி வேலைகள், பூசைகள், கிரியைகள் தடைப்பட்டன. இதனுல் இக் குடியேற்றவாசிகளும் விநாயக பக்தர்களும் மிகவும் கவலை கொண்டார்கள். இதைத் தொடர்ந்து 1985 ம் வருட ஆரம்பத்தில் பரிபாலன சபையின் அயராத முயற்சியினுல் திருப்பணிவேலைகள் ஆரம்பிக்கபபட்டுத் துரிதகதியில் நடைபெற்றன.

இதன்பயனுக ஒன்றரை இலட்சம் ரூபாவிற்கு மேற்பட்ட செலவுசெய்யப்பட்டு மூலஸ்தான தூபி வேலைகள், எழுந்தருளி மண்டபம், மஹாமண்டபம், தரிசன மண்டபம், நந்தி பலிபீடம் முதலியன அழகுற அமைக்கப்பட்டு புனராவர்த்தன திருமஞ்சன மகாகும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. இன்று திங்கள் இரவு அலங்காரத் திருவிழாவும் அதனைத் தொடர்ந்து நாற்பத்தி நான்கு நாட்களுக்கு வேதாகமமுறைப்படி தொடர்ந்து மண்டலாபிஷேகமும், நாற்பத்தைந்தாம் நாள் சங்காபிஷேகமும் அன்றிரவு அலங்கார உற்சவமும் நடைபெறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

சைவசமய முறைப்படி சைவ ஆலயக் கும்பாபிஷேகம் ஆகக் குறைந்தது பன்னிரண்டு வருடத்திற்கொரு முறையாவது நடைபெற வேண்டுமென்பதும், இவ் அபிஷேகங்களைத் தரிசிப்பவர்கள் பன்னிரண்டு வருடமும் தினமும் வழிபடுவதனுல் அடையத் தக்கதிவ்விய பேறுகளைப் பெறுவர் என்பதும் வேத ஆகம அறிஞர்களின் கருத்தாகும். கிரியைகளைக் காண்பதுவும், அவை சிறப்புற நடைபெற உதவுவதும், நாம் தரிசிப்பதும், எம்மை முத்தி இன்பத்தைப் பெறச் செய்யும் வழியாகும்.

பொன். தில்லைநாதன்
அதிபர்: முழங்காவில் அரசினர் வித்தியாலயம்.

## பிறந்தநாள் வாழ்த்து

சாவகச்சேரி கெற்பலி இராமச்சந்திரன் தம்பதியின் மகன் வெஸ்லி இன்று தனது ஏழாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறுர்.

## புங்குடுதீவில் கண்காட்சி

(புங்குடுதீவு)

புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயத்தில் கல்விக் கண்காட்சி நாளை 15ம் திகதி காலை 9மணிக்கு ஆரம்பமாகும். புங்குடுதீவு கொத்தணி அதிபர் திரு. ஆர். எஸ். செல்வத்துரை இக் கண்காட்சியைத் திறந்து வைப்பார்.

## பயன்பாடு நிகழ்ச்சி

கொழும்புத்துறை சென். யோசப்ஸ் வித்தியாலயத்தில் கட்புல செவிப்புல சாதனங்களின் பயன்பாடு பற்றிய நிகழ்ச்சி நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணி முதல் மாலை 3 மணிவரை நடைபெறவுள்ளது. வட்டார கல்வியதிகாரி திரு. இ. சிவானந்தன் பிரதம அதிதியாக கலந்து கொள்வர்.

## அதிகாரிகள் அராலி விஜயம்

(புங்குடுதீவு)

யாழ் அரசாங்க அதிபர் திரு. மு. பஞ்சலிங்கம், யாழ் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திரு. எஸ். சிவதாசன் ஆகியோருட்பட பல அதிகாரிகள் நேற்று முன்தினம் காலை அராலித்துறைமுகத்திற்கு விஜயம் செய்து தீவுப் பகுதி மக்களின் போக்குவரத்து நிலைமையினை நேரில் பார்வையிட்டனர்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

# நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



## முத்துக்குமாரசாமி சற்குணலிங்கம்

(முன்னைநாள் எஸ்டேட் லிகிதர்)

தோற்றம்: 25.12.1920 மறைவு: 14.06.1986

எமது குடும்பத்தலைவரை இழந்து நாம் கலங்கி நின்றபொழுது எமக்கு உதவி ஆறுதல் அளித்த உற்றுர், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதோடு 14 07 1986 திங்கள் அன்று எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளில் கலந்து அன்னரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

நீர்வேலி மத்தி,
நீர்வேலி.

மனைவி,
மக்கள்.

B/1415

இலங்கையின் தமிழ்ப் பகுதிகளிலிருந்து

# வெளிநாடு செல்லும் இளைஞர் திருப்பப்படுவது அதிகரிப்பு!

விளம்பரங்கள் மூலம் வெளிநாடுகள் செல்வதற்கு ஏஜன்ஸிகளால் அழைத்துச் செல்லப்பட்ட பல தமிழ் இளைஞர்கள் தாம் சென்ற அந்நாடுகளில் இருந்து உடனடியாக திருப்பி அனுப்பப்படுகின்றனராம். அண்மைக் காலங்களில் இது அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய நாட்டு நிலைமையால் அதிகளவு பணத்தை இந்த ஏஜன்ஸிகளுக்குச் செலுத்தி ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளுக்கு செல்பவர்களுக்கே இக் கதி ஏற்பட்டுள்ளது.

குறிப்பிட்ட அந் நாடுகளுக்குள் நுழைவதற்கு இவற்றின் அயல் நாடுகளுக்கு இவர்கள் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து நுழைய முற்படும் போது அதிகாரிகளினல் கைது செய்யப்பட்டு திருப்பியனுப்பப்படுகின்றனர்.

இவ்வாறு திரும்பி வந்த சில தமிழ் இளைஞர்கள் கடந்தவாரம் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் பாதுகாப்பு அதிகாரிகளின் விசாரணைக்கு உட்படுத்தப் படுவதுடன் பல கெடுபிடிகளுக்கும் ஆளாகியமை குறிப்பிடத்தக்கது

## நாவலர் வித்தியாலயத்தில் செப்டம்பரில் எழுச்சி விழா

"ஈழத்திலும் தமிழகத்திலும் சைவ தமிழ்ப் பண்பாட்டினை வளர்த்த பெருமை நாவலர் பெருமானுக்கேயுரியது. சின்னஞ்சிறு குழந்தைகளின் வருங்காலம் கருதி யாழ்ப்பாணத்திலும், சிதம்பரத்திலும் சைவப் பாடசாலைகளை நிறுவினர். நாவலர் சைவப்பிரகாச வித்தியாலயம் என்ற பெயர்களுடன் இன்றும் விளங்குகின்றன. நாவலர் பெருமான் பரம்பரையில் ஈடிணையற்ற தமிழ் அறிஞராக விளங்கியவர் மூதறிஞர் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள். அவர்களது ஞாபகமாக யாழ்ப்பாணம் நாவலர் மகா வித்தியாலயத்தில் நிறுவவிருக்கும் நாவலர் சைவ தமிழ்ப் பண்பாட்டு நிலையம் வருங்கால மாணவர்களின் வரன்முறையான கல்விக்குக் கலங்கரை விளக்கமாக நிச்சயம் திகழும்."

நாவலர் மகா வித்தியாலயத்தில் நிறுவப்படவுள்ள சைவ தமிழ்ப் பண்பாட்டு நிலைய ஆலோசனைக் குழுவுக்குத் தலைமை வகித்துப் பேசிய யாழ்ப்பாணக் கல்வி அதிபதி திரு. இ சுந்தரலிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யாழ். கல்வித் திணைக்களத்தில் நாவலர் தர்மகர்த்தா சபை சார்பிலான இக் கூட்டத்தில் பிரதம கல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரம் பேசுகையில், "எதிர்வரும் செப்டம்பரில் எழுச்சி விழா ஒன்றை விரிவான முறையில் நடத்துவதுடன் மாணவர்கள், ஆசிரியர்கள், பொது மக்கள், பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் வாய்ப்பையும் ஏற்படுத்துதல் வேண்டும்" என்ருர்.

"எழுச்சி விழாவை மூன்று நாட்களுக்கு நடத்துவது மிகவும் பொருத்தம். நாவலர் அரங்கு, சிவபாதசுந்தரனர் அரங்கு, பண்டிதமணி கணபதிப்பிள்ளை அரங்கு என்று அரங்குகளை வகுத்து விழாவை சிறப்புற நடாத்தலாம்" என்று யாழ்ப்பாணம் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. இ. சிவானந்தன் குறிப்பிட்டார்.

சமயச் சொற்பொழிவுகள், பண்ணிசை, புராணபடனம், கலை அரங்குகள் அமைப்பது பற்றித் திருவாளர்கள் இ. திருநாவுக்கரசு. ஞா. சிவஞான சுப்பிரமணியம், க. சி குலரத்தினம், பி நடராசன், அ பஞ்சாட்சரம், திருமதி மங்கையர்க்கரசி, திருச்சிற்றம்பலம் ஆகியோர்கள் ஆலோசனை வழங்கினர்கள்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் நிறைவுரை நிகழ்த்தினர்.

## கரந்தனில் கல்வி கண்காட்சி

(நீர்வேலி)

நீர்வேலி கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயத்தில் இம்மாதம் 15ம் திகதி செவ்வாய்க்கிழமை கல்விக் கண்காட்சி இடம்பெற உள்ளது. பாடசாலை அதிபர் திரு.கு. சண்முகநாதன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் பிரதம அதிதியாக கோப்பாய் வட்டாரக் கல்வியதிகாரி திரு. ஆ. வ தங்கராஜாவும், சிறப்பு விருந்தினராக திரு. சு. ஆறுமுகமும் கலந்து கொள்வார்கள்.

நிதியுதவி வழங்குவதில்

## அந்தகர் விடயத்திலும் அரசு பாரபட்சம் காட்டுகிறது

(சாவகச்சேரி)

"தென் இலங்கையில் உள்ள விழிப்புலனற்றவர்களுக்கும், அவர்களைச் சார்ந்த சங்கங்களுக்கும் அரசாங்கம் தாராளமாக உதவி நிதி வழங்கிக் கொண்டிருக்கிறது. ஆனல் வட இலங்கையைப் பொறுத்தளவில் அரசாங்கம் ஏனேதானே என்ற நிலையில் உள்ளது. இந்த நிலையில் எமது விழிப்புலன் இழந்தவர்களுக்கும், அவர்களின் உயர்வை நாடும் சங்கங்களுக்கும், எமது மத்தியிலுள்ள தாபனங்கள், பொது மக்கள், ஏன் தனி மனிதர்கூட தம்மாலான நிதியுதவி வழங்கி ஆதரிக்க மனிதாபிமானத்துடன் முன்வர வேண்டும்".

இவ்வாறு யாழ். பிரஜைகள் குழுத்தலைவர் சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம் ஓர் வேண்டுகோளை விடுத்துள்ளார்.

கைதடி நவில்ட் பாடசாலையில், விழிப்புலன் இழந்தோர் சங்கத்தின் பத்தாவது ஆண்டு பூர்த்தி விழா சங்கத் தலைவர் திரு. கே. விஜயராஜசிங்கம் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து தனது உரையில் "விழிப்புலன் இழந்தவர்கள் மனித சமுதாயத்தில் ஒரு படி தாழ்ந்தவர்கள்என்பது போன்ற ஒரு கணிப்பு நிலவிவருகிறது. ஆனல் விழிப்புலன் உள்ளவர்களைவிட விழிப்புலன் இழந்தவர்கள் எந்த வகையிலும் தாழ்ந்துவிடவில்லை. அவர்களே சமுதாயத்தில் சில படிகள் உயர்ந்துள்ளனர் என்ருல் ஆச்சரியப்படுவதற்கில்லை. காரணம் அவர்களில் முயற்சி, சாதுரியம், நுட்பம்,சுத்தம் ஆகியவற்றைக் காணமுடியும். உதாரணமாக ஒரு நாற்காலி வரிச்சலை எடுத்துக் கொண்டால் விழிப்புலனுள்ளோரை விட விழிப்புலனற்ருேர் செய்வதே கெட்டியாகவும், பலமாகவும், சுத்தமாகவும், நீண்டகாலம் உழைக்கக்கூடியதாகவும் உள்ளது இது மக்கள் கண்டறிந்த உண்மை.

விழிப்புலனற்ருேர் வீட்டில் ஒடுங்கிக்கிடந்த ஒரு காலம் இருந்தது. இன்று விஞ்ஞான வளர்ச்சி காரணமாக அது மலையேறிவிட்டது. பல கைத்தொழில் முதல், கல்வியிலும் பல்கலைக்கழகம் வரை சென்று பேரும் புகழும் அடைந்து கொண்டிருக்கிருர்கள். மக்கள் உதவி கிடைத்தால் விண்ணில் பறக்கவும் தயாராக இருக்கிருர்கள். விழிப்புலன் உள்ளவர்களிடம் ஏற்படும் விழிவழிப்புகும் இச்சைகள் அவர்களிடம் கிடையாது. அவர்கள் "பைபிள்" "பகவத்கீதை" வழி செல்லும் தெய்வீகமானவர்கள். அவர்களுக்கு றொட்றிக் கழகம் வழங்குவது போன்று, சகல ஸ்தாபனங்களும், மக்களும் தாராளமாக நிதி உதவி வழங்க வேண்டும்" என்ருர்.

சமூக சேவைகள் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் திருமதி சிவசிதம்பரம் பேசுகையில், தமது சமூக சேவைப் பகுதியால் எவ்வளவு தூரம் நிதி வழங்க முடியுமோ, அவ்வளவிற்கு வழங்குவதாகக் கூறினர்.

கைதடி நவீல்ட் பாடசாலை உப அதிபர் திரு கே. கோபாலகிருஷ்ணன் பேசுகையில், 'தம்மாலான நிதியைத் திரட்டி இச்சங்கத்தின் வளர்ச்சியில் போதிய சுறுசுறுப்பு எடுப்பதாகவும் கூறினர். சங்க உறுப்பினர் செல்வி இரஞ்சினி விஜயரத்தினம் பேசுகையில் விழிப்புலன் இழந்தவர்கள், பல கைத்தொழிலில் சிறக்கவும்,கல்வியில் உயரவும் கைதடி நவீல்ட் பாடசாலையே முன்மாதிரி காட்டியது. எனவே விழிப்புலனற்ற குழந்தைகளை உடனடியாக இப்பாடசாலையில் சேர்த்து உயர்வளியுங்கள் என்ருர்.

## பண்டிதமணியின் நினைவாக பல நிகழ்ச்சித் திட்டங்கள்

மூதறிஞர் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் நினைவாக, அவர் எழுதிய கட்டுரைகள் "செந்தமிழ்க் களஞ்சியம்" என்ற தலைப்பிலும், பண்டிதமணி அவர்களைப் பற்றி இலங்கை இந்திய அறிஞர்கள் எழுதிய கட்டுரைகள் ஆராய்ச்சி மலர் வடிவிலும் அடுத்த ஆகஸ்ட் மாதத்தில் வெளிவர இருக்கின்றன.

பரந்த அடிப்படையில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள நினைவஞ்சலிக் கூட்டத்தில் இந் நூல்கள் வெளியிடப்படும். அதையடுத்து பண்டிதமணி அவர்களை என்றும் ஞாபகஞ் செய்யும் வகையில் பல்கலைக் கழக மட்டத்தில் ஒருவருக்கு புலமைப் பரிசில் வழங்கும் திட்டம் அமுல் செய்யப்படும்.

அடுத்தாண்டு மார்ச் 13ஆம் திகதி பண்டிதமணி அவர்களது ஞாபகமாக நினைவுப் பேருரை ஒன்றினை நடத்துவதற்கு விசேட ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும், இதற்கான ஏற்பாடுகளைப் பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை கவனித்து வருகிறதென்றும் பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபையின் காரியதரிசி திரு. அ. பஞ்சாட்சரம் தெரிவித்தார்.

## நாளை சங்காபிஷேகம்

முரசுமோட்டை ஸ்ரீ சிவசுப்பிரமணிய ஆலய மகாகும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து தற்போது மண்டலாபிஷேகம் நடைபெற்று வருகிறது. நாளை செவ்வாய்க்கிழமை பகல் மகா சங்காபிஷேகமும், இரவு விசேஷ திருவிழாவும் நடைபெறும்.

## மண்டைதீவு வாழ் மக்கள் வெளியேறி வருகின்றனர்!

மண்டைதீவு சந்தியில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டதையடுத்து அப்பகுதிமக்கள் பெருமளவில் வெளியேறி வருகின்றனர். இராணுவ முகாம் காரணமாக இப்பகுதியிலுள்ள மக்கள் தமக்குவேண்டிய உணவுப் பொருட்களைப் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளதாகவும், பாடசாலைகளையும் அலுவலகங்களையும் நடாத்த முடியாதுள்ளதாகவும்மண்டைதீவு கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் யாழ். அரசாங்க அதிபரிடம் முறையிட்டுள்ளது.

இதேவேளை மண்டைதீவு பகுதியிலுள்ள பற்றைக் காடுகள் கடந்த சில நாட்களாக ஹெலிகப்டரிலிருந்து அசிட் வீசி எரிக்கப்பட்டு வருகின்றது. அத்துடன் முகாமிலுள்ளவர்கள் மண்டைதீவுக் கிராமத்தினுள் புகுவதற்கு அடிக்கடி முயற்சிப்பதாகவும், இடைக்கிடையே ஹெலிகப்டரிலிருந்து சுடப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## கிளிநொச்சி பிரஜைகள் குழு கலைக்கப்பட்டது ஊர்ஜிதம்

(கிளிநொச்சி)

"கிளிநொச்சிப் பிரஜைகள் குழு பொதுமக்களால் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டதை அடுத்து கலைக்கப்பட்டது," என்று முன்னர் பத்திரிகையில் வெளிவந்த செய்தி பிழையானதென்றும், அதுகுறித்து விளக்கமளிக்குமாறும், பிரஜைகள் குழு கலைக்கப்பட்டதன் பின்பு நிறுவப்பட்ட தற்காலிக அமைப்புக் குழுவுக்கு முன்னுள் பிரஜைகள் குழுவின் தலைவர் எழுதிய கடிதத்திற்கு கடந்த 9ம் திகதி புதன்கிழமை குருகுலத்தில் நடைபெற்ற பிரஜைகள் குழு புதிய நிர்வாகிகள் தெரிவுக் கூட்டத்தில் விளக்கமளிக்கப்பட்டது

திரு எஸ். சுந்தரலிங்கம் அவர்களால் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டு திரு. எஸ். பரராஜசிங்கம் அவர்களால் அனுமதிக்கப்பட்டு சபையோரினல் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டதாக கடந்த கூட்ட அறிக்கையில் எழுதப்பட்டிருந்தமை தற்காலிக அமைப்பு குழுவின் செயலாளர் திரு.எஸ். தனபாலசிங்கம் அவர்களினல் வாசித்துக்காட்டப்பட்டு சபையோரினல் ஏற்றுக் கொள்ளப்பட்டது

மேற்படி செய்தி குறித்து கலைக்கப்பட்ட பிரஜைகள் குழுவின் சில நிர்வாகிகள் பத்திரிகை நிருபர்களிடமும் வாக்குவாதப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பல்கலைக்கழக தமிழ் மன்ற இலக்கிய போட்டி முடிவுகள்

யாழ். பல்கலைக்கழக தமிழ் மன்றம் அகில இலங்கை ரீதியில் நடாத்திய இலக்கியப் போட்டியில் பரிசு பெறுவோர் விபரம் வருமாறு: கவிதை:- முதலாம் பரிசு கவிமணி க த. ஞானப்பிரகாசம், இரண்டாம் பரிசு திரு. வே. கணபதிப்பிள்ளை (பாண்டியூரன்), மூன்றும் பரிசு திரு நா. க. சண்முகநாதபிள்ளை.

சிறுகதை: முதலாம் பரிசு இல்லை. இரண்டாம் பரிசு பரமேஸ்வரி பாலசிங்கம், மூன்றும் பரிசு 1) திருமதி கோகிலா மகேந்திரன், 2) தாமரைச் செல்வி.

குறுநாவல்;- முதலாம் பரிசு இல்லை. இரண்டாம் பரிசு:- செல்வி ஷாந்தகௌரி முத்துச்சாமி (ஸ்வாதி), மூன்றும் பரிசு (1) திரு. ப சிவானந்தசர்மா (கோப்பாய் சிவம்), 2) செல்வி இ. சிவபூஷணி (உமா இராஜநாயகம்).

## யுனிசெப் போட்டிகளில் பரிசு பெறும் மாணவர்கள்

யூனிசெப் நிறுவனம் பாடசாலைகளுக்கிடையே நடாத்திய கட்டுரை, பேச்சு, சித்திரப் போட்டிகளில் பின்வருவோர் முறையே முதலாம், இரண்டாம், மூன்றும் இடங்களைப் பெற்றுள்ளனர்.

கட்டுரைப் போட்டி: கனிஷ்ட பிரிவு: செ.தயாளினி (யாழ். கன்னியர்மடம் ம. வி. ந. பெ. சிங்கராயர் (சென் பற்றிக்ஸ் கல்லூரி) பெ. அ. வலன்ரைன் (சென்.பற்றிக்ஸ்- கல்லூரி).

மத்தியபிரிவு: ஆன்ஜெனிற்ரு (சென்ஜேம்ஸ் மகளிர் பாடசாலை) இ. தர்மலட்சுமி (புனித மரியாள் வித்தியாலயம்) சு. யூலியட் பிரேமினி (யாழ். கன்னியர்மடம் ம. வி.).

மேற்பிரிவு: அ. மரிஸ்ரெலா (யாழ்.கன்னியர்மடம் ம. வி.) அ. மாரிஜராங்கனி (புனித அந்தோனியார் மகளிர் பாடசாலை) ந. நந்தினி (அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை.

சித்திரப்போட்டி: கனிஷ்ட பிரிவு யோ. றயந்தன் (ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாசாலை) என். நடனச்சந்திரன் (நல்லூர் சி. சி. த. க.) அ. நீலா (திருக்குடும்பக் கன்னியர் மடம்).

சிரேஷ்டபிரிவு: சிவாஜினி சிவநேசன் (யாழ். கன்னியர் மடம் ம. வி.) ஜெயவாணி ஜெயரட்ணம் (திருக்குடும்பக் கன்னியர்மடம்) மைதிலி குணரட்ணம்(யாழ். கன்னியர்மடம்

பேச்சுப்போட்டி: கனிஷ்ட பிரிவு சோ. யோலண்ட் (கன்னியர் மடம் ம வி. (தமிழ்) என்மதிமாறன் (சென் பற்றிக்ஸ் கல்லூரி) சோ. மீனும்பிகை (கன்னியர்மடம் ம. வி.) (தமிழ்).

மத்தியபிரிவு: கே. லலிதான்சனு (கன்னியர்மடம் ம. வி. (தமிழ்) சுரேஷ்யோசெப்(சென் பற்றிக்ஸ் கல்லூரி) இ. சுரேந்திரா(நல்லூர்சாதனுத.க.பா.)

மேற்பிரிவு: மதிநாயகம் (சென் பற்றிக்ஸ் கல்லூரி) ஜே. எல்.ஸ்பென்சபுறானே (சென். பற்றிக்ஸ் கல்லூரி) இ. மேரி லெற்றிசியா (நாவாந்துறை றே. க.).

உதய சிந்தனை

துன்பப்படும்போது ஓராயிரம் முறை இறைவனை நினைப்பதைவிட இன்புறும்போது ஒரு முறையாவது அவனை நினைப்பது மேலாகும். —ஆபிரகாம் லிங்கன்

140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 22437

14-7-86 திங்கட்கிழமை (அக்ஷய) ஆனி 30

# ஏககாலத்தில் இங்கு எல்லாம் நடக்கிறது!

இலங்கையின் அரசியல் வரலாற்றில் மற்றுமொரு முக்கியமான வாரம் நேற்று ஆரம்பமாகியுள்ளது.

இனப்பிரச்சினைத் தீர்வு விடயமாக இலங்கை கடைப்பிடித்து வரும் போக்கில் மாற்றம் காணப்படுவது போன்ற வெளித் தோற்றமொன்று இப்போது தென்படுகிறது.

மூன்று வருடகாலமாக இந்திய அரசாங்கம் எடுத்து வந்த பகீரதப்பிரயத்தனத்தின் விளைவாக இலங்கை அரசு தனது முன்னைய நிலையிலிருந்து கொஞ்சம் விடுபட்டு, ஒருபடிமேலே போய் ''மாகாணசபை'' என்ற யோசனையை முன்வைத்துள்ளது.

''இந்திய அரசின் முயற்சிகளை முறியடித்து'' என்ற அவப்பெயருக்கு ஆளாகக் கூடாது என்பதில் சென்னையிலுள்ள தமிழீழ விடுதலைப் போராளிகள் குழுக்களும், தமிழர் விடுதலைக் கூட்டணியும் மிக அவதானமாக இருந்து வருகின்றன.

இதன் காரணமாக கூட்டணிக் குழுவொன்று கொழும்புக்கு வந்துள்ளது; போராளிகள் குழுக்களின் குழுவொன்று புதுடில்லி சென்றுள்ளது.

இவர்களில் எந்த ஒருவராவது மாகாணசபையை ஏற்கவில்லையாயினும், பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள வேண்டியதும், தங்கள் கருத்துக்களையும், அவநம்பிக்கைகளையும் முன்வைக்க வேண்டியதும் இப்போது இவர்களுக்கு அவசியமாகியுள்ளது.

அரசியல் கட்சிகளின் பேச்சுவார்த்தை மீண்டும் காலத்தை இழுத்தடிப்பதற்கான ஒரு தந்திரம் என்பது பொதுவான கருத்தாகும்.

இக்கால அவகாசம் சிலவேளையில் நாட்டில் பெரும் பிரச்சினையை உருவாக்கி மீண்டும் ஒரு அரசியல், இனப்பிரச்சினைப் பூகம்பத்தைக் கூட ஏற்படுத்தலாம்.

முதலில் வடக்கும், கிழக்கும் இணையாத மாகாணசபை என்கிறார்கள்; வேண்டுமானால் பொது விடயங்களில் இரண்டும் இணைந்து செயற்படலாமென்கிறார்கள்.

ஒன்பது மாகாணசபைகளுக்கும் ஏககாலத்தில் தேர்தல் நடத்தப்படுமென்றார்கள்; இப்போது வடக்குக் கிழக்கு மாகாணசபைகளுக்கு மட்டும்தான் முதலில் தேர்தல் நடைபெறுமென்கிறார்கள்.

இவைகளைப் பார்க்கும் போது இப்போது முன்வைக்கப்பட்டுள்ள புதிய யோசனைகளையாவது அரசாங்கம் திரிகரண சுத்தியுடன் செயற்படுத்துமா என்பது பலத்த சந்தேகமாகவேயுள்ளது.

இவ்வாறான ஒரு நெருக்கடி நிலையில்தான் பேச்சுவார்த்தைகளும், சந்திப்புகளும், கருத்துப்பரிமாறல்களும் ஆரம்பமாகியுள்ளன.

ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுடனான கூட்டணியினரின் முதற்கட்டப் பேச்சுக்கள் நேற்றுக் காலை கொழும்பில் ஆரம்பமாயின.

அதேவேளையில் புதுடில்லியில் போராளிகள் குழுக்களின் தலைவர்கள் திரு. ஜி. பார்த்தசாரதி, திரு. ஏ. பி. வெங்கடேஸ்வரன் ஆகியோரைச் சந்தித்து தங்கள் நிலைப்பாட்டை எடுத்துக் கூறியுள்ளனர்.

இதேசமயத்தில், யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்கள் தங்கள் மன நிலையையும், எதிர்பார்ப்பையும் வெளிப்படுத்திய மாபெரும் ஊர்வலமும் நடைபெற்றுள்ளது.

பொதுமக்களுடன், தமிழ் மக்களிடையே இயங்கிவரும் ஐந்து பிரதான போராளி இயக்கங்களும் இணைந்து மேற்படி ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடத்தியுள்ளன.

ஜனாதிபதி ஜெயவர்த்தனா கூட்டியுள்ள அரசியல் கட்சிகள் மாநாட்டையும், மாகாணசபை என்ற புதிய யோசனையையும் கண்டித்து, அவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில்

நேற்றைய ஊர்வலம் நடைபெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

''திறந்த மனத்துடன் பேசநாம் வந்திருக்கின்றோம்'' என்று கூட்டணித் தலைவர் சிவசிதம்பரம் கூறியிருக்கிறார்.

''இது நல்ல சந்தர்ப்பம்; இதனைச் சரியாக பயன்படுத்தி பிரச்சினைக்குச் சுமுகமான அரசியல் தீர்வு காணுங்கள்'' என்று அமெரிக்க ஜனாதிபதி றீகன், ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

ஆனால் எந்தத் தீர்வை மையமாக வைத்து பேச்சை நடத்துவது?

ஏற்கமுடியாத ஒன்று என்று பொதுவாக கூறப்படுவதை, வலிந்து திணிக்க முடியுமா?

★ புதிதாக உருவாகும் ஒரு நெருக்கடி

# தீவுப்பகுதி குடித்தொகையும் தொடர்புடைய பிரச்சினைகளும்

கார்த்திகேசு குகபாலன்

விரிவுரையாளர் - யாழ். பல்கலைக்கழகம்

இலங்கையில் சமூக, பொருளாதார அரசியல் மற்றும் கலாசார துறைகளுக்கு பெரும் பங்காற்றிய தீவுப்பகுதி மக்கள் இன்றுபல்வேறுவழிகளில் பாதிப்படைந்தவர்களாக வாழ்ந்து வரும் காலகட்டம் இது. லைடன்தீவு, நெடுந்தீவு, புங்குடுதீவு, காரைதீவு, அனலைதீவு, நயினாதீவு, மண்டைதீவு, எழுவைதீவு ஆகிய எட்டு பிரதான தீவுகளை உள்ளடக்கிய பகுதியான தீவுத்தொகுதி யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடமேற்கே அமைந்துள்ளது. ஏறத்தாழ எழுபது சதுரமைல் நிலப்பரப்பைக் கொண்டிருக்கும் இப் பிரதேசம் வரலாற்றுக் காலத்தில் பல்வேறு வழிகளில் சிறப்புத் தன்மைபெற்றிருந்ததற்கு ஆதாரங்கள் பல உண்டு. பொருளாதார சமூக, கலாசார பண்புகளைப்பொறுத்தவரை இத்தீவுப் பகுதிகள் பொதுப் பண்புகளுடன், தத்தமக்குரிய தனிப்பண்புகளையும் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக காரைதீவு தவிர்ந்த ஏனைய தீவுகள் பெரும்பாலான விஷயங்களில் பொதுப்பண்புகளைக் கொண்டிருக்கின்றதை காணலாம். காரைதீவு அமைந்துள்ள இடம், குடாநாட்டுப் பிரதேசத்துடனான தொடர்பு, சமூகப் பண்பாட்டு நிலைமைகள், பல்வேறு நிலைகளில் குடாநாட்டின் ஏனைய பிரதேசங்களுடன் அரசினால் தொடர்பை ஏற்படுத்தியிருப்பது, அதாவது பாராளுமன்றத் தொகுதியைப் பொறுத்தவரை வட்டுக்கோட்டையுடன் அமைந்துள்ளமை, ஏனைய தீவுத் தொகுதி மக்களுடன் தொடர்பை ஏற்படுத்துவதில் சிரமத்தை அளிக்கும் புவியியற் பண்புகள் போன்றன காரைதீவினை வேறுபடுததியிருப்பதால் இச்சிறு கட்டுரையில் அதனைத்தவிர்த்து நோக்கப்படுகின்றது.

தீவுப் பகுதியின் 1971, 1981 ஆம் ஆண்டுக் குடித்தொகைக் கணிப்பீட்டின்படி மொத்தக் குடியிருப்பாளர்கள் முறையே 58026, 64160 ஆகும். 1985 ஆம் ஆண்டு மதிப்பீட்டின்படி 70,000 ஆக அதிகரித்துள்ளது. (காரைதீவு தவிர்ந்த) யாழ். மாவட்ட மொத்தக் குடித்தொகையில் 7·7 வீதத்தை கொண்டிருக்கின்றது. சமனற்ற குடித்தொகைப்பரம்பலைக் கொண்ட தீவுப் பகுதியின் குடித்தொகையில் 49·3 வீதமானவர்கள் லைடன்தீவு அல்லது வேலணைத் தீவிலும், 22·8 வீதமானோர் புங்குடுதீவிலும் வாழ, நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, மண்டைதீவு, எழுவைதீவில் முறையே 8·8, 6·6, 6·0, 5·8, 0·7 வீதத்தினர் வாழ்ந்து வருகின்றனர். நாட்டின் ஏனைய பிரதேசத்துடன் தரை வழியாகப் போக்குவரத்தினைக் கொண்டுள்ள புங்குடுதீவு, லைடன்தீவு, மண்டைதீவு ஆகிய பகுதிகளில் 77 9 வீதமான மக்கள் வாழ்ந்து வருகின்றனர். ஏனையோர் தரை, கடல் ஆகிய இரு வழிப் போக்குவரவின் மூலமே தொடர்பு கொள்ளும் நிலையிருக்கின்றது. ஆனால் சென்ற சிலமாதங்களாக எல்லாத் தீவு மக்களும் தரை, கடல் ஆகிய இருவழிப் போக்குவரவினை தவிர்க்க முடியாது, ஏற்றுக் கொள்ள வேண்டியுள்ளதுடன் இப்பகுதி மக்கள் மீண்டும் 50 ஆண்டுகளுக்கு முன்னர் நிலவிய நிலைக்குச் சென்றுள்ளனர் என்றே கூறல்வேண்டும்.

நாட்டினதும், யாழ்ப்பாண மாவட்டத்தினதும், குடித்தொகை வளர்ச்சி வீதம் 1981 இல் முறையே 1·7, 1·8 ஆகும். ஆனால் தீவுப் பகுதியின் குடித்தொகை வளர்ச்சி வீதம் 1 1 ஆகவிருக்கின்றது. இதற்கு வெளி இடப்பெயர்வில் வசதி படைத்தோரின் அக்கறைநிலையும் ஒரு காரணமாகும். குறிப்பாக நெடுந்தீவுக் குடித்தொகை வளர்ச்சி வீதம் குறைவு. வசதி படைத்தவர்கள், அற்றோர் என்ற பாகுபாடில்லாமல பல்வேறு காரணிகளை மையமாகக் கொண்டு 1950களிலிருந்து வெளியிடப் பெயர்வை மேற்கொண்டு வருகின்றனர். இதன் விளைவாக 1946 இல் 6372 ஆகவிருந்த மக்கள் எண்ணிக்கை 1981 இல் 5620 ஆகக் குறைவுற்றது. நயினாதீவு, புங்குடுதீவுபோன்ற பகுதிகளிலிருந்து பெருமளவிற்கு மக்கள் வெளியிடப் பெயர்வினை மேற்கொண்டு வருவதன் காரணமாக வருடாந்த வளர்ச்சி வீதம் 1971—1981 இல் முறையே 0 4, 0 6 ஆகவிருக்கின்றது. அனலைதீவு, லைடன்தீவு போன்றன இடப்பெயர்வில் முன்னர் கூறிய பிரதேசங்களோடு ஒப்பிடும் போதுகுறைவாகவே இருந்துள்ளது. இதற்கு அவ்வப் பிரதேசங்களின் பௌதிகநிலையுடனான, பண்பாட்டுக் காரணிகளின் செயற்பாடேயாகும். எவ்வாறாயினும் சமனற்ற குடித்தொகை பரம்பல் வளர்ச்சியைக் கொண்ட இப்பிரதேசம் பல்வேறு பிரச்சினைகளை அனுபவித்து வருகின்றது.

கிளிநொச்சி யுட்பட்ட பழைய யாழ்ப்பாண மாவட்டத்தின் சதுரமைலுக்கான குடித்தொகை அடர்த்தி 861 ஆகும். ஆனால் நெடுந்தீவு, எழுவைதீவு தவிர்ந்த ஏனையன அடர்த்தி மிக அதிகமாகும். நயினாதீவு, அனலைதீவு, புங்குடுதீவு, லைடன்தீவு மண்டைதீவுப் பகுதிகளில் சதுர மைலுக்கான அடர்த்தி முறையே 2359, 751, 1379, 1290, 1090 ஆகும். இவை மேலும் மேலும் அதிகரிக்க வசதி வாய்ப்புக்கள் குறைவடையலாம். அந்நேரம் மக்கள் பல்வேறு பிரச்சனைகளுக்குத் தம்மை ஆளாக்க வேண்டிவரும். எனவே மக்கள் வெளியிடப் பெயர்வில் அக்கறை கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது.

1981ம் ஆண்டுக் கணிப்பின்படி 99 வீதமானோர் இலங்கைத் தமிழராகும். அத்துடன் 81.6 வீதத்தினர் இந்துக்களாகவும், 16.9 வீதத்தினர் றோமன் கத்தோலிக்கராவர். ஏனையோர் வேறு மதங்களைப் பின்பற்றுபவர்களே. இத்தகைய குடித்தொகைப் பண்புகளைக் கொண்டிருக்கும் தீவுப் பகுதியில், குடித்தொகை வளர்ச்சிக்கு ஏற்ப பௌதிக, பண்பாட்டு அம்சங்களின் ஒத்துழைப்பு கிடைப்பதில் உள்ள பற்றாக்குறையின் விளைவாக பல்வேறு பிரச்சனைகளை அனுபவிக்கின்றனர். 1950 களில் ஆரம்பிக்கப்பட்ட குடியேற்றத்திட்டங்களுக்கு மாவட்டத்தின் ஏனைய தேர்தல் தொகுதிகளோடு ஒப்பிடும்போது இங்கிருந்து அதிக அளவினர் இடம்பெயர்ந்த போதிலும்

1970 களின் பின்னர் விவசாய நோக்கததுடன் வெளியேறியோர் மிகச் சிறுபான்மையினரே. ஆனால் வசதிபடைத்த, அரச தொழில் பார்ப்பவர்களின் வெளியிடப் பெயர்வு குறிப்பாக யாழ்ப்பாண நகரம் நோக்கிய பெயர்வு அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது. 1984ம் ஆண்டு மதிப்பீடு செய்யப்பட்ட புள்ளிவிபரங்களின்படி யாழ்ப்பாண நகர மக்களில் 38வீதமானோர் தீவுப் பகுதிகளைச் சார்நதவாகள் என்பது குறிப்பிடததக்கது.

தீவுப் பகுதியின் குடித்தொகைப் பிரச்சினைகள் பலவகையின மட்டுமன்றி தீவுகளுக்கிடையே பிரச்சினைகளின் அளவுகள் வேறுபட்டமைந்துள்ளது. முதலில் பொருளாதாரப் பிரச்சினையை நோக்கின் இப்பிரதேசம் ''ஒரு மணி ஓடர் பொருளாதார'' அமைப்புடையது. அதாவது பெரும்பாலான உழைப்பாளிகள் தீவுத் தொகுதியை விட்டு தற்காலிகமாக வெளியேறி பொருளாதார ஈட்டத்தைப் பெற்று அவற்றினை மணி ஓடராக குடும்பததவர்களுக்கு அனுப்புவதனாலேயே இவ்வாறான பெயர் உருவாக வழியேற்பட்டது. அடிக்கடி நாட்டில் இடம் பெற்றுவரும் இனக் கலவரங்களால் பெருமளவில் இப் பிரதேச மக்கள் பாதிக்கப்பட்டுள்ளமையால் இன்றைய நிலையில் பொருளாதார பலம் செயற்கையாகவே குறைக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்களிலும் பார்க்க மறைமுகமாகப் பாதிக்கப்பட்டவர்கள அதிகமாவார். மேலும் லைடன் தீவு, மண்டைதீவு தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் விவசாயமல்லாத தொழிலை மேற்கொள்ளுபவர்களே அதிகம் என கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன. குடித்தொகை அதிகரிப்பு, நிலம் துண்டாடல், நன்னீர் வளம் அருகிச் சென்று கொண்டிருக்கும் நிலை, இடப்பெயர்வின் மூலம் அதிக வருமானம் பெற்றுக் கொள்ளக் கூடிய நிலை, கல்வித்தேவை, நகரக் கவர்ச்சி போன்றன மக்களை பலவந்தமாக இடம் பெயர்வுகளுக்குள்ளாகும் நிலை அண்மைக் காலத்தில் ஏற்பட்டுள்ளது. அத்துடன் எல்லாத் தீவுகளிலும் ஓரளவு வளமான விவசாய நிலங்களாகக் காணப்பட்ட பிரதேசங்கள் குடியிருப்பு நிலங்களாக மாறிவருகின்றமையால் விவசாய நடவடிக்கைகளை கைவிட வேண்டிய நிலை காணப்படுகின்றது இவை தவிர நாட்டின் தாராள இறக்குமதிக் கொள்கையின் விளைவாக கஷ்டத்தின் மத்தியில் உற்பத்தி செய்துவரும் விவசாயிகள் உரியவருமானம் கிடைக்கப் பெறுவதில் உள்ள சிறமத்தினால் அதனைக் கைவிட்டு வேறு தொழில்களை நாடுவதை அண்மைக் காலங்களில் அவதானிப்புக்களின் மூலம் அறியலாம்.

விவசாய உற்பத்திக்காயினும் சரி, மக்களது அன்றாட தேவைகளுக்காயினும் சரி, நன்னீரினை பெற்றுக் கொள்ளமுடியாத நிலை மக்களின் தலையாய பிரச்சினையாகவுள்ளது. கடந்த 1955–1984 ம் ஆண்டுகளி

– 5 ம் பக்கம் பார்க்க

இன்று மகா கும்பாபிஷேகம்

# ஸ்ரீ இலஞ்சியாரணியம் மண்டுவில் அம்மன் ஆலயம்

தமக்கு அப்பாற்பட்ட மாபெரும் சக்தியொன்றுண்டெனவும் அதுவே அண்டசராசரம் சகலதையும் இயக்குகின்றதென அறிந்த மூதாதையர் தத்தமக்குக் காட்சிகொடுத்த உருவத்தே அச்சக்தியை வழிபட்டு உய்தனர். அவ்வாறே காணபத்தியமும், சைவமும், சாக்தமும், கௌமாரமும், பைரவமும், வைஷ்ணவமும் தழைத்தன. பிறமதங்களைக் கைக்கொள்ளும் புறச் சமயத்தினரும் இவ்வாறே நாஸ்திகனும் மரணத்தறுவாயில் கடவுளை நினைக்கின்றான். தமது மத வளர்ச்சி நிமித்தம் சைவ, பௌத்த மதக் கோவில்களை அழித்த போர்த்துக்கீசர், டச்சுக்காரரும் தமக்கு இடர் வந்தவேளையில், சைவ, பௌத்த மதக்திற்கு சிற்சில நன்மைகளைச் செய்துள்ளனர். இதற்கு உதாரணமாக டச்சுக்காரரின் நிலமானியம் பெற்ற ஆலயமாகக் கூறக் கூடியவற்றில் சாவகச்சேரி வடக்கு அருள் மிகு ஸ்ரீ இலஞ்சியாரணியம் அம்மன் ஆலயத்தைக் குறிப்பிடலாம்.

இலஞ்சியென்றால் மகிழமரம் அல்லது வற்றாத நீர்நிலையையும், ஆரணியமெனின் சோலை, காடு எனவும் பொருள்படும். இப்பெயரின் பொருளிற்கேற்ப ஓங்கி வளர்ந்து அடர்ந்த மகிழமரங்களையும், மருது, பாதிரி, குரவம், கொன்றை போன்ற பலவகை கோட்டுப் பூமரங்களையும் வற்றாத "அமுதசுரபி" என்னும் நீர்நிலையையும் உள்ளடக்கிய ஆறு ஏக்கர் விஸ்தீணம் கொண்ட சோலையின் நடுவில் தொன்று தொட்டு வீற்றிருந்து மகா சக்தியாகிய எம் அன்னை அருள்பாலித்த வண்ணம் இருக்கின்றாள்.

இவ்வாலயத்தின் சாதனங்கள், தோம்பு, பட்டயங்கள், கர்ண பரம்பரைக் கதை ஆகிய சான்று கொண்டு பார்க்கும் போது கி. பி 1600 மட்டிலிருந்து வரலாறு அறியக் கூடியதாக உளது. அக்காலத்தில் யாழ்ப்பாண அரசனாக விருந்த பரராஜசேகரனிடத்திலிருந்து கி. பி 1658ல் போத்துக்கீசரும் அவர்களின் பின் 1711 மட்டில் டச்சுக் காரரும் யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றினர். அக்காலத்தில் டச்சு அரசாங்க மராமத்துஅதிகாரியான வான் டீ வாற் என்பவர் வீதி வகுத்தல் நிமித்தம் யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து சாவகச்சேரிக்குக் குதிரையில் வந்து சேர்ந்தார். அவர் குறித்த அம்பாள் ஆலயத் தருகே டச் வீதி அமைப்பு வேலையில் ஈடுபட்ட போது அவரது குதிரை நோய் கண்டு வீழ்கின்றது.

அப்போது அம்பாள் அர்சகராகவிருந்த அமரர் வேலுப்பிள்ளை கந்தர் என்பவர் குதிரைக்கு விபூதியிட்டு சுகப்படுத்தி வைத்தார். அதன் நன்றிக் கடனாக ஆலயமிருந்த இலஞ்சியாரணியம் எனப்படும் சோலை நிலத்தை அவருக்கு மானியம் செய்து கொடுத்தார். அதன்பின் காலத்திற்கு காலம் அச்சகர்களாகப் பணி புரிந்த மூதாதையர்களான கந்தர், நாகர், நாகர் கந்தர், கதிர்காமர், சரவணமுத்து, வைரமுத்து, அருணாசலம், சரவணமுத்து பெரிய தம்பி ஆகியோர் காலத்தில் சிறுகச் சிறுக வளர்ச்சி கண்ட அம்பாள் ஆலயம் தற்போது மேற்குறித்த அர்ச்சகர்களின் சந்ததியினரும் பொது மக்களும் இணைந்த தொரு பரிபாலன சபையால் செவ்வனேபரிபாலிக்கப்படுகின்றது.

சபையினரின்: தொண்டிற்கு முதற்படியாக ஆலயத்தில் பல திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு ஆகமவிதிப்படி நிகழும் க்ஷய வருடம் ஆனி அத்தத் திருநாளில் சிம்மலக்ன சுப முகூர்த்தத்தில் (14 7.1986)ல் மஹா கும்பாபிஷேகம் நிகழ அம்பாள் திருவருள் செய்துள்ளாள்- இவ்வாலயத்தில் சகல இந்து உற்சவங்களும் கொண்டாடப்பட்டுவருவதுடன் ஆனி மாத பூர்வபக்கப் பஞ்சமி தொடக்கம் திருவிழாக்களும் தேர்த்திருவிழாவும் நடாத்தப்படுகின்றது.

இவ்வாறு மூர்த்தி, தீர்த்தம் கீர்த்தி, தலவிருட்சம் முதலான பல விசேட சிறப்புக்களைக் கொண்ட சாவகச்சேரி அருள் மிகு ஸ்ரீ "இலஞ்சியாரணியம்" அப்பாளினுடைய கும்பாபிஷேக வைபவத்தைக் கண்டு வேண்டுவன பெற்று "மனித்தப் பிறவியும் வேண்டுவனே இம் மாநிலத்தே" என வாழ்வாங்கு வாழ்வோமாக.

சிவஸ்ரீ கு. கிருபானந்தக் 'குருக்கள்

(ஆதீன அர்ச்சகரும் செயலாளரும்)

## வளர்மதி ச. ச. நிலையமும் தீவிரம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சியில் இருந்து அகதிகளாகத் தற்போது கைதடியில் தஞ்சமடைந்தோருக்கான நிவாரணப்பணியில் மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலையமும் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

## சென். நீக்கிலஸ் வெற்றி

(வண்ணார்பண்ணை)

ரோட்டறி கழகம் நடாத்திய உதைபந்தாட்டப் போட்டியின் போது சென். மேரிஸ் விளையாட்டுக்கழகத்தை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழகம் எதிர்த்து விளையாடி சென். மேரிஸ் கழகத்தை தோற்கடித்தது. சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக வீரர் அன்ரன் சகாராஜா திறமையாக விளையாடி ரசிகர்களின் பாராட்டினைப் பெற்றுக்கொண்டார்.

## நிதி ஒதுக்கீடு

(சங்கானை)

வட்டுக்கோட்டை கிழக்கு தாவளை கிராம அபிவிருத்திச் சங்க கட்டடத்துக்கு மின்சார வசதி இல்லாமையைச் சுட்டிக் காட்டியதன் விளைவாக மின்சாரம் வழங்குவதற்காக பதினையாயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக சங்க பொதுச் செயலாளர் திரு. நா. சிவசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ராஜீவ் மனநிலை குறித்து மத்திய நிதிமந்திரி பிரதாப்சிங் சொல்கிறார்; ஈழத்தமிழன் தினசரி

# கொல்லப்படுவது அறிந்து உறக்கம் கெடுவதுமுண்டு!

(சென்னை)

**"பிரதம மந்திரி திரு. ராஜிவ் காந்தி இலங்கை இனப்பிரச்சினையில் எவ்வளவு தூரம் அக்கறை கொண்டுள்ளார் என்பதனை அவரது மந்திரிசபையில் இடம்பெற்ற சகமந்திரி என்றவகையில் நானறிவேன். இப்பிரச்சினையால் அவர் உறக்கமற்றுக் கூட இருந்துள்ளார்" என்று மத்திய நிதிமந்திரி திரு. பிரதாப்சிங் கூறினார்.**

பொதுநிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர் பிரதம மந்திரி இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் எத்துணை கரிசனை கொண்டுள்ளார் என்பதனை உள்ளத்தைத் தொடும் வகையில் உணர்ச்சிபூர்வமாக எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில் இந்திரா காங்கிரசன் தமிழ்நாடு தலைவர் திரு எம். பழனியாண்டி உட்பட வேறு பல முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டனர்.

திரு பிரதாப்சிங் பேசுகையில் பின்வருமாறு சொன்னார்: "பிரதம மந்திரி பஞ்சாப், அஸ்ஸாம், மிஸோரம் விவகாரங்களில் தீர்வு கண்டதுபோல் இலங்கை இனப்பிரச்சினையிலும் தீர்வு ஏற்பட தீர்க்கத்துடன் தீவிரமாக முனைந்துள்ளார். இலங்கையில் தினசரி தமிழர்கள் கொல்லப்படுவது அறிந்து எப்படி வேதனைப்படுவார் என்பதை நானறிவேன். இதனால் அவரது உறக்கம்கூட பல தடவைகளில் கெட்டதுண்டு."

மேலும் தனது உரையில், "பிரதம மந்திரி தொலைநோக்குள்ளவர். தீர்க்கமான சிந்தனை சக்தி உள்ளவர்" என்றும் சொன்னார்.

இலங்கை இனப்பிரச்சினையில் பிரதம மந்திரி பற்றிய நிலைப்பாட்டை அவரது மந்திரி சபை சகா ஒருவர் இவ்விதம் தெட்டத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது இலங்கைத்தமிழர் விவகாரத்தில் அதீத ஆர்வம்கொண்டுள்ள தமிழ்நாடுமக்களுக்கும், ஈழத்தமிழர்களுக்கும், உலகெங்கணும் பரந்து வாழும் தமிழர்களுக்கும் ஆத்ம திருப்தி அளிப்பதாக இருக்கும் என்று அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர்.

## தீவுப்பகுதி...

—4ம் பக்கத் தொடர்

டையே நன்நீர் வளம் கொண்டபகுதிகளில் 30 வீதமானவை உவர் நீராக மாற்றம் பெற்றுள்ளது. குறிப்பாக புங்குடுதீவு, நெடுந்தீவு, நயினாதீவு, லைடன் தீவின் மேற்குப் பகுதிகளில் இவற்றின் தராதரத்தினை அறிந்துகொள்ளலாம். செந்தில் வடிவேல் அவர்கள் மேற்கொண்ட ஆய்வின்படி தீவுப் பகுதிகளில் 62 வீதமான பகுதி உவர்நீர்த் தன்மை கொண்டதாகவும் 15வீதமான பகுதிகள் நன்நீர்ப் பகுதிகளாகவும், 23 வீதமான பகுதிகள் உவர்நீர்த்தனமை குறைந்த பகுதியாகவும் உள்ளன எனக் கணிப்பிடப்பட்டுள்ளது. புங்குடுதீவில் 68 வீதமும், நெடுந்தீவு, நயினாதீவில் முறையே .58 வீதமும் உவர் நீர்ப்பகுதிகளாகவுள்ளன எனவும் தெரிவித்துள்ளனர். அதே வேளையில் நன்நீர் பகுதிகளில் கிடைக்கப்பெறும் நீரின் அளவு மிகக் குறைந்தளவாகவேயுள்ளது. இப் பிரதேசங்களில் நீர் பிரச்சினை காணப்பட தரை கீழ் நீரின் படுகை மிகக் குறுகியதாகவிருப்பதும், நுகர்வுத் தேவை அதிகரித்துக்கொண்டு செல்வதும், மழைவீழ்ச்சியின் அளவு குறைவடைந்து செல்லும் நிலையும், நில அமைப்பானது குறுகிய காலத்தில் கிடைக்கப்பெறும் மழையினை சேமித்து வைக்கமுடியாத நிலையில் அமைந்துள்ளமை அல்லது மழைநீரில் பெரும்பகுதி கடலுடன் கலந்துவிடும் நிலை காணப்படல் போன்றன நீரினைப் பெற்றுக் கொள்வதில் இடர்ப்பாடுகளை ஏற்படுத்தி விடுகின்றது.

மக்களின் அன்றாடப் பிரச்சினையில் போக்குவரவு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி விடுகின்றது. குறிப்பாக நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு, போன்ற பகுதிகளிலிருந்து பல்வேறு கிராமத்தின் மத்தியில் கடல் பிரயாணத்துடன் கூடிய போக்குவரவினை மேற்கொண்டு வருகின்றனர். ஏனைய பகுதிகளைச் சேர்ந்தோர் நேரடியாகத் தரைமார்க்கமானபோக்குவரவு காணப்பட்டது. அண்மைக்கால சூழ்நிலைகளின் விளைவாக தரை மார்க்கப் போக்கு வரவு ஸ்தம்பிதமடையவே கடந்த 50 ஆண்டுகளுக்கு முன்னர் வரை பயன்படுத்தி வந்த அராலித் துறையூடாக மண்டைதீவு மக்கள் உட்பட சகல தீவுப்பகுதி மக்கள் குடா நாட்டுடன் போக்குவரவினை மேற்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். அத்துடன் பிரயாணத்துக்கான செலவு மூன்றிலிருந்து ஐந்து மடங்கு வரை அதிகரித்துள்ளது. இதன் விளைவாக நாட்டின் ஏனைய பகுதிகளுடனும் யாழ்ப்பாண நகருடனும் கொண்ட தொடர்பினைக் கட்டுப்படுத்தியுள்ளது. அத்துடன் பெரும்பாலானோரின் தொழில் புரியும் இடம், தீவுப்பகுதிக்கு வெளியிலும் குடியிருப்பு தமது சொந்தக் கிராமத்தையும் கொண்டிருக்கும் பல்லாயிரக் கணக்கான மக்கள் அவஸ்தைப் படுகின்றனர். அதே போல தீவுப்பகுதிக்கு வெளியில் உள்ள ஆனால் தீவுப் பகுதிகளில் தொழில் பார்ப்பவர்கள் போக்கு வரத்தினை காரணம் காட்டி கடமைக்கு வருவது மட்டுப்படுத்தப்பட்டுள்ளமை பல்வேறு வழிகளில் பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளது. தீவுப்பகுதி மக்கள் பெரும்பாலானோர் பின்தங்கிய விவசாயத்தொழிலில் இருந்து தம்மை விடுவித்துக் கொண்டமைதான் இதுவரை காலமும் தமது பாரிய பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்கின்றனர் என்பதை மறுக்க முடியாது. குறிப்பாக பல ஆயிரக்கணக்கான இளைஞர்கள் வெளிநாடுகளுக்கு சென்று பொருள் ஈட்டிவருவதனாலும் இப்பிரதேச மக்கள் ஓரளவு பாதிப்பிலிருந்து குறைவடைந்து வருகின்ற தன்மையை காணமுடிகின்றது. ஆனால் இதுவும் நீண்ட நாட்கள் நீடிக்கும் எனக் கூறமுடியாது. எனவே மக்களது பிரச்சினையில் முக்கியத்துவம் கொண்ட போக்கு வரவுதுறை எளிமைப் படுத்தப்பட்டால் மக்களின் பாதிப்பு குறைவடையலாம்.

தீவுப்பகுதி மக்கள் விவசாயமல்லாத துறைகளூடாகபொருளாதாரத்தை தெரிவு செய்த தன்விளைவாக கல்வித்துறைக்கு அதிக அக்கறை செலுத்துகின்றனர். "கல்வியே ஒரு மூல வளம்" என்ற நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர் ஆனால் உயர் கல்வித் தேவையைத் தீவுப்பகுதிகளில் பூர்த்தி செய்ய முடியாத நிலையின் காரணமாக பெருமளவிற்கு யாழ். நகரமே பூர்த்தி செய்கின்றது. தற்போது நகரத்திற்கும் அனைத்துத் தீவுகளுக்கும் இடையேயான போக்குவரவுத் தொடர்பு பெருமளவில் துண்டிக்கப்பட்டமையால் உள்ளூர் பாடசாலைகள் இயங்க முடியாத நிலை மட்டுமல்லாது உயர் கல்வியும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது: எனவே எதிர்காலச் சந்ததியினருக்கான தேவையினை ஏற்படுத்திக் கொடுப்பதில் சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும்.

எவ்வாறெனினும், போக்குவரவுப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டாலும்கூட, தீவுப்பகுதியின் குடித் தொகை வளர்ச்சி வீதம் குறைவாகக் காணப்பட்டபோதும், அதிகரித்துவரும் குடித் தொகையின் தேவையினை பூர்த்தி செய்யக் கூடிய வகையில் பொருளாதாரநிலை மட்டுமல்லாது நிலப்பயன்பாட்டுத் தன்மை கூட எதிர் விளைவினையே கொடுத்து வருகின்றது. இந்நிலையில் சிறுபான்மையினரான பொருளாதார வலு படைத்தவர்கள் வெளியிடப் பெயர்வை மேற்கொண்டு வருவது மட்டுமல்லாது பொருளாதார நிலையில் தாழ்ந்திருக்கும் மக்களை அவர்களது பொருளாதார முயற்சியுடன் கூடிய வெளி இடப்பெயர்வினை ஊக்குவித்தல் அவசியமாகின்றது இன்றைய பொருளாதார நெருக்கடியில் தொழில் புரியும் இடமும், வாழுமிடமும் வேறுபட்டிருந்தால் மக்களால் அதனை ஜீரணிக்க முடியாது. தீவுப்பகுதி தற்போது சமூக உட்கட்டமைப்புகளில் விருத்தி பெற்று வருகின்றதெனினும், பொருளாதார உட்கட்டமைப்பினை பொறுத்தவரை பின்தங்கியே செல்கின்றது. இந்நிலையில் வளர்ச்சி குன்றிய புங்குடுதீவு, நயினாதீவு, நெடுந்தீவு, அனலைதீவு போன்ற இடங்களிலுள்ள விரும்பியோர் பொருளாதார தேட்டத்துடன் கூடிய வெளி இடப்பெயர்வினை மேற்கொள்ளல் சிறப்பானதும் அவர்களின் எதிர்காலமும் வளம் பெறும் என நம்பலாம்.

ஈழமுரசு
THE EELAMURASU

## லங்காபுவத்தின் அந்தச் செய்தியில் எந்தவித உண்மையும் கிடையாது

(வல்வெட்டித்துறை)

தொண்டமானாறு பாலம் சீரமைப்பது தொடர்பாக சென்ற பொறியியலாளர்கள், ஊழியர்கள் முதலானோரை விடுதலைப் போராளிகள் தடைசெய்ததாகவும், இதனால் ஏற்பட்ட மோதலில் இராணுவத்தினர் போராளிகளைத் தாக்கி முறியடித்ததாகவும் வெடிமருந்துகள் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாகவும் கடந்த இரவு ரூபவாஹினி மற்றும் அரச தொடர்பு சாதனங்கள் மூலம் 'லங்காபுவத் அறிவிப்பதாகக் கூறப்பட்ட செய்தியில் எதுவித உண்மையுமில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. நடக்காத, நடக்கமுடியாத செயல்களை நடந்ததாகத் திரிபுசெய்து கூறி மக்களை திசைதிருப்ப நினைக்கிறது அரசாங்கம். தமிழ் மக்களைப் பொறுத்தவரை, அவர்கள் இவ்வாறான செய்திகளைக் கேட்டு பழக்கப்பட்டுவிட்டனர். இப்புனரமைப்பு நடக்கக்கூடியகாரியமல்ல, என அப்பகுதி முகாம் பாதுகாப்பில் கடமைபுரியும் விடுதலைப்புலிகள் போராளி ஒருவர் தெரிவித்தார்.

தூதுவர் டிக்ஸிற்றின் கேள்வி

# 58, 77, 83ம் வருட தாக்குதல் நல்லொழுக்க வகையானதா?

(கொழும்பு)

**"தமிழ் தீவிரவாதிகளை இந்தியாவில் தங்கியிருக்கச்செய்து அவர்களை இயங்க அனுமதிப்பது நல்லொழுக்கத்திற்கு உகந்ததா?" என்று கொழும்பிலுள்ள இந்திய தூதுவர் திரு. ஜே. என். டிக்ஸிற்றிடம் கேட்கப்பட்ட கேள்விக்கு அவர் பதிலளிக்கும் போது அரசியல் மீதான தீர்ப்பு நல்லொழுக்க அடிப்படையில் நிதானிக்கப்படுவதல்ல என்று குறிப்பிட்டார்.**

கொழும்பில் ரோட்டரிகிளப் விருந்து நிகழ்ச்சியொன்றில் திரு. டிக்ஸிற் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அவரிடம் மீண்டும் அதே கேள்வியை மற்றொருவர் கேட்டபோது, "1958, 1977, 1983ஆம் ஆண்டுகளில் இலங்கைத்தீவில் நிகழ்ந்த சம்பவங்களின் நல்லொழுக்கம் எப்படியானது?" என்று தூதுவர் பதில்கேள்வி கேட்டு அனைவரையும் வாயடைக்கச்செய்தார்.

ஏதுமறியாத அப்பாவி மக்களுக்கெதிரான வன்முறைகளுக்கும் பயங்கரவாதத்திற்கும் நியாயம்கற்பிக்க எவராலும் முடியாது. ஆனாலும் அரசியல் மீதான தீர்ப்பு நல்லொழுக்க அடிப்படையில் நிதானிக்கப்படுவதல்ல என்றும் தூதுவர் தீர்க்கமாக தெரிவித்தார்.

தமிழ் பயங்கரவாதம் எவ்வாறு ஆரம்பமானது என்பதை நேர்மையுடனும் திடமாகவும் நீங்கள் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும். இந்தியா அகதிகளெவரையும் வருந்தி அழைக்கவில்லை. எவராவது ஒருவர் ஆயுதத்தை ஏந்துவாராஞல், நியாயமான மனிதர் இதனை ஆராய்ந்து அதற்கான காரணத்தைக் கண்டுபிடித்து அரசியல் தீர்வு காணவேண்டியது அவசியமில்லையா?" என்றும் தூதுவர் டிக்ஸிற் தனது பேச்சில் மேலும்தெரிவித்தார்.

இலங்கை இனப்பிரச்சினை பற்றியும் இந்தியா வகிக்கும் பங்கு பற்றியும் தூதுவர் இங்கு விளக்கமாக எடுத்துக்கூறினார்.

## எம். ஈ. பீயும் நிராகரித்தது

ஜனாதிபதியின்மாகாணயோசனையை மக்கள் ஐக்கிய முன்னணியும் நிராகரித்துள்ளது. "இது ஒரு மோசடியான யோசனை" என்று முன்னணியின் தலைவரான திரு. தினேஷ் குணவர்த்தன விபரித்துள்ளார். அரசியல் கட்சிகள் மாநாட்டில் தாம் கலந்து கொள்ளப்போவதில்லைஎனவும் அவர் அறிவித்துள்ளார்.

## போராளிகள் இருவர் மரணம்

நேற்றுக்காலை வெடிமருந்துப் பரிசோதனையில் ஈடுபட்டிருந்த தமிழீழ விடுதலைப் போராளிகள் இருவர், எதிர்பாராது அவை வெடித்ததால் மரணமாகினர். நிசந்தன் (கெங்காதரன் காத்தான்குடி), தேவா (சிறீகாந்தன் யாழ்ப்பாணம்) ஆகியோரே மரணமானவர்கள். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

### மாகாண...

சிறிலங்காவின் ஆலோசகர் நீலன் திருச்செல்வமா?, பேச்சுவார்த்தை வேண்டாம் தனிநாடு வேண்டும், கூட்டணித் துரோகிகளைத் தூக்கி எறியவேண்டும், ஆவரங்கால் மாநாட்டை கூட்டணி மறந்தது ஏன்? வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை விட்டுக்கொடுத்தது ஏன்? போன்ற சுலோகங்கள் இவ் ஊர்வலத்தில் காணப்பட்டன.

ஊர்வலத்தின் முடிவில் பல்கலைக்கழக மைதானத்தில் பொதுக் கூட்டமொன்றும் நடைபெற்றது முஸ்லிம் மக்களின் பிரதிநிதி உட்பட பலர் மாகாணசபைத் திட்டத்தை எதிர்த்தும் தனி ஈழம் ஒன்றே எமது பிரச்சினைக்கு தீர்வு எனவும் உரையாற்றினர்கள்.

தமிழ்த் தலைவர்களின் துரோகத்தனத்தை அம்பலப்படுத்தவும், எமது மக்களின் உறுதிப்பாட்டைத் தெரியப்படுத்தவும், அரசியற் கட்சிகளின் மாநாட்டிற்கும் மாகாண சபைத் திட்டத்திற்கும் எதிர்ப்புத் தெரிவிக்கவுமே இவ் ஊர்வலம் நடத்தப்படுவதாக தமிழ் பேசும் மக்களின் சார்பில் வெளியான பிரசுரமொன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

புளொட், ஈ. பி. ஆ. எல். எஃப், தமிழீழ இராணுவம், ஈரோஸ், விடுதலைப் புலிகள் ஆகிய விடுதலை அமைப்புகளும் இவ் ஊர்வலத்தில் கலந்து கொண்டன.

(படங்கள்: வி. ஆனந்த்)

### மாகாணசபை யோச...

யில் கூடி இந்த முடிவை எடுத்தது.

ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைகள் அவரது அரசியல் நேர்மையின்மையைக் காட்டுவதாக சுட்டிக்காட்டியுள்ள சுதந்திரக்கட்சி, அரசியல் கட்சிகளை மட்டுமன்றி, இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியையும் கூட ஜனாதிபதி ஏமாற்றியுள்ளார் எனவும குற்றம் சாட்டியுள்ளது.

நாளைய அரசியல் கட்சிகள் மாநாட்டில் சுதந்திரக் கட்சி பங்கு பற்றாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### மாகாண சபையை...

தெரிவித்த போராளிகள் இயக்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

"தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகளை ஏற்றுக் கொள்ளாத, அவர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்காத எந்தத் தீர்வையும் நாம் ஏற்றுக் கொள்வது எமது மக்களுக்கு நாம் செய்யும் ஒரு துரோகமாக இருக்கும் என்றே நாம் கருதுகிறோம். அந்த வகையிலதான் மாகாண சபைத் திட்டத்தையும் நாம் நிராகரிக்கிறோம்.

தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பொறுத்த வரையில் அவர்கள் எந்த வகையிலும் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுததவில்லை. எந்த வகையில் தமிழ்பேசும் மக்களுக்காக பேரம் பேசவோ, பேச்சுவார்த்தை நடத்தவோ அவர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை. அவர்கள் தமது பலவீனத்தின் அடிப்படையிலேயே இப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொளகிறார்கள்.

ஆனால் எம்மைப பொறுத்தவரை நாம் மேற்கொளளும் நடவடிக்கைகளினூடாக அரசாங்கத்தைப் பலவீனப்படுத்தி அதன் மூலம் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கும் முகமாகவே எமது நடவடிக்கைகள் அமைந்துளளன.

சென்னையிலுள்ள எமது இயக்கங்களின் தலைவர்களைப் பொறுத்தவரையில் அவர்களும் எமது மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிப்பவர்களாகவே உள்ளார்கள்.

போராட்டத்தை சர்வதேச ரீதியில் பிரசாரப்படுத்தும் முகமாகவும் அரசாங்கம் மேற்கொண்டுவரும் சில நடவடிக்கைகளை அமபலப்படுத்துவதற்காகவும் திம்புவில் நடைபெற்றது போன்ற சில பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வது தவிர்க்க முடியாதது மட்டுமல்ல போராட்ட கால கட்டத்தில் இடையிடையே ஏற்படுகின்ற ஒரு அம்சமாகவும் அது உள்ளது.

இதன் மூலம் விடுதலை அமைப்புகள்தான் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகள் என்பது சர்வதேச ரீதியில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதுடன் ஸ்ரீ லங்கா அரசின் திட்டங்களும் இதன் மூலம் அம்பலப்படுத்தப்பட்டது. இவ்வாறான பேச்சுக்கள் விடுதலை அமைப்புகள் அரசை பணிய வைத்ததாலேயே நடைபெற்றன" என இங்கு ஐந்து இயக்கங்களினாலும் தெரிவிக்கப்பட்டது.

## ஜி. பி, வெங்கடேஸ்வரனுடன் விஜே சந்தித்துப் பேச்சு

(புதுடில்லி)

தற்போது பாரத விஜயம் மேற்கொண்டுள்ள ஸ்ரீலங்கா மக்கள் கட்சிப் பொதுச் செயலாளர் திரு. விஜயகுமாரணதுங்க புதுடில்லியல் உயரதிகாரிகளைச் சந்தித்துச் சம்பாஷணை நடத்தியுள்ளதாக நேற்றுத் தெரிவிக்க பட்டது.

அவர் புதுடில்லியில் கொள்கை வகுப்புக் குழுத்தலைவரான திரு ஜி. பார்த்தசாரதியையும், வெளியுறவுச் செயலாளர் திரு. ஏ. பி. வெங்கடேஸ்வரனையும் சந்தித்து இலங்கை இனபபிரச்சினை தொடர்பாகக் கருத்துப் பரிமாறறம் செய்தார்கள்.

### ராணுவ ரோந்து...

பலர் காயமடைந்ததாகவும் தெரியவந்துள்ளது.

நேற்றுக் காலை ஆறு மணியளவில் திருநகர், ஜெயந்திபுரம் ஆகிய இடங்களில ராணுவம் ரோந்து செய்ய முயன்றபோது புலிகளுடன் ஏறபட்ட மோதல் சுமார் மூன்றரை மணிநேரம் நீடித்தது.

ஹெலிகப்டர்களும், பொம்பர் விமானங்கள், கடல்விமானங்களும் இங்கு பயன்படுத்தப்பட்டதால பல வீடுகளும் சேதமுற்றன.

இங்கு இடம்பெற்ற பதில் தாக்குதலில் பல ராணுவத்தினர் பலியானதாகவும், பலர் காயமுற்றதாகவும், பின்வாங்கிய ராணுவதிடமிருந்து பெருமளவு ரவைகளும்,ரவைச் சங்கிலிகளும், மோட்டார் ஷெல்களும் கைப்பற்றப்பட்டதாகவும் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

### கூட்டணி...

ஆனாலும் மாகாணசபையை ஏற்கமுடியாத தங்கள்நிலையை கூட்டணியினர் இங்கு தெரிவித்ததாகத் தெரியவந்துள்ளது.

கூட்டணிக் குழுவில் திருவாளர்கள் அ. அமிர்தலிங்கம், மு. சிவசிதம்பரம், இரா. சம்பந்தன், வி. யோகேஸ்வரன், வி. ஆனந்தசங்கரி, பி எஸ். சூசைதாசன், நீலன் திருச்செல்வம் ஆகிய எழுவர் பங்குபற்றினர். ஜனாதிபதியுடன் அமைச்சர்கள் லலித அத்துலத்முதலி, ரணில் விக்கிரமசிங்கா ஆகியோரும் சர்வகட்சி மாநாட்டுச் செயலர்ளர் திரு. பீலிக்ஸ் டயஸ் அபேசிங்காவும் பங்குபற்றினர்

### தமிழீழ ராணுவம்...

கட்சிகளின் கூட்டம் என்பனவற்றை எதிர்த்து நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் தமிழீழ இராணுவமும் மற்றும் நானகு இயக்கங்களும பங்குபற்றின. நேற்றைய பத்திரிகையில இச் செய்தி தவறுதலாக தமிழீழ விடுதலை இராணுவம் என பிரசுரமாகியிருந்தது.

### கட்சிகள்...

ஆனாலும் ஜனாதிபதியுடன் கூட்டணி இன்று தொடர்ந்தும பேச்சுவார்த்தையை நடத்தும்.

### புலிகள்...

ளால் முறியடிக்கப்பட்டதாக விடுதலைப புலிகள் அறிவித்துள்ளனர்.

இராணுவத்துக்கு உதவியாக இரு ஹெலிகப்டர்கள், இரு பொம்பர் விமானங்கள், ஒரு கடல் விமானமும் அடம்பனைச் சுற்றிவளைத்து தாக்குதல் நடத்தினவாயினும், தரையிறங்க முயன்ற ஹெலி ஒன்றை றொக்கட்லோஞ்சர் மூலம் தாக்கியதால் சகல விமானங்களும் பின்வாங்கின.

புலிகளின் சிலிண்டர்தாக்குதலால பப்லோ ஆமடவாகனமொன்று சிதைந்ததாகவும், அதிலிருந்த அனைவரும் கொல்லபபட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. அட்லரி மோட்டார் ஒனறும் றொக்கட் லோஞ்சரால் சேதப்படுத்தப்பட்டது.

இத்தாக்குதல்களின்போது தங்கள்தரப்பில் மூவருக்கு காயங்கள் ஏற்பட்டுள்ளதென்று தெரிவித்துள்ள விடுதலைப் புலிகள். ராணுவதரப்பில் பலர் கொல்லப்படடுள்ளதாக அறிவித்துள்ளதுடன், ராணுவம் தங்களின் சுற்றிவளைப்பிலிருந்து தப்பமுடியாது தவித்ததாகவும் தெரிவித்துள்ளனர்.

அடம்பனில் பல தமிழர், முஸ்லிம்களின்கடைகள் ராணுவத்தினரால் எரிக்கப்பட்டதுடன், விமானத்தாக்குதலால் சுமார் இருபத்தைந்து தமிழரின் வீடுகளும் சேதமுற்றன.

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அஸோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 14-07-86 திங்கட்கிழமை வெளியிடப்பட்டது. தொலைபேசி: 22487